# JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU
# CC No.368 /2025

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw3/ Pw2 |
| Name | : Sankar |
| Father/Husband's Name | : Kamalanadhan |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 45 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12.03.2026.

**Accused present.**

**முதல் விசாரணை:**

நான் தற்போது சென்னை பெருநகர மத்திய குற்ற பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 07.04.2022 அன்று காலை 6.30 மணியளவில் செங்கல்பட்டு தாலுக்கா காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது, எனக்கு கிடைத்த ரகசிய தகவல் கிடைத்ததின் பேரில், நான் மற்றும் என்னுடன் இளவரசன் காவலர், முருகேசன் காவலர் ஆகியோர்களுடன் செல்வி நகர் பேருந்து நிறுத்தம் அருகே காலை 7.00 மணியளவில் ரோந்து பணியிலிருந்தபோது, அருகிருந்த ரகசிய தகவலாளி அடையாளம் காட்ட, எதிரியை விசாரித்தபோது, அவர் முன்னுக்கு பின் முரணாக பதில் சொன்னதால், அவரை சோதனை செய்ய போவதாக சொல்லி மேற்படி, எதிரியிடம் நான் உன்ஊன சோதனை செய்வதற்கு சாட்சிகளாக குற்றவியல் நீதித்துறை நடுவர் அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர் முன் சோதனை செய்வதற்கு தேவையா என்று கேட்டபோது, அதற்கு எவ்வித ஆட்சேபணையும் தெரிவிக்காமல் நீங்களே சோதனை செய்யும்படி அனுமதி கொடுத்ததின் பேரில், அவரை சோதனை செய்த போது, அவர் பாக்கெட்டில் 50 கிராம் கஞ்சா வைத்திருந்தார். பொது மக்கள் சாட்சிகள் யாரும்

அங்கு இல்லாததால், அதை நான் மேற்சொன்ன இளவரசன் மற்றும் முருகேசன் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகசர் **அதசா.ஆ2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் பிறகு எதிரியை கைது செய்து, கைப்பற்றப்பட்ட பொருள் மற்றும் எதிரியுடன் நிலையம் சேர்ந்து, எதிரி மீது நிலைய குற்ற எண்.199/2022 8(c),20(b)(ii)(A) NDPS act ன் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அதசா.ஆ3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர், எதிரியை உரிய பாராவசம் ஒப்படைத்து, இருநபர் ஜாமீனில் விடுவித்தேன். வழக்கு சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். அந்த படிவம் 91 **அதசா.ஆ4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த 50 கிராம் கஞ்சா **சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் இவ்வழக்கில் எனது புலன் விசாரணையை முடித்து, மேற்சொன்ன பிரிவுகளின் கீழ் எதிரியின் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

எனக்கு 07.04.2022ம் தேதி காலை 6.30 மணியளவில் ரகசிய தகவல் கிடைத்தது. ரகசிய தகவல் யார் சொன்னார்கள் என்பதை குறித்து தெரிவிப்பதற்கு அவசியமில்லை. சம்பவ இடத்திற்கும், காவல்நிலையத்திற்கு எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 6 கி.மீ தூரம் இருக்கும். எனது மேல் அதிகாரி வாய்மொழி உத்தரவை கொடுத்தார். நான் சம்பவ இடத்திற்கு அரசாங்க கொடுத்த இருசக்கர வாகனத்தில் சென்றேன். காவலர்கள் மற்றொரு வாகனத்தில் வந்தார்கள். நான் சம்பவ இடத்திற்கு காலை 7 மணிக்கு சென்றேன். நாங்கள் எடுத்து சென்ற உபகரணங்களின் மூலம் எடை போட்டதன் அடிப்படையில் 50 கிராம் கஞ்சா எதிரி வைத்திருந்ததாக தெரிய வந்தது. கஞ்சாவை கைப்பற்றும் போது காலை நேரம் என்பதால் பொது மக்கள் யாருமில்லை. சம்பவ இடம் கிராமம் என்றால் இல்லை. பிவி களத்தூர் சாலை செல்லும் வழியில் உள்ளது. அதை சுற்றி நிறைய கிராமங்கள் உள்ளது. காலை நேரம் என்பதால் பொது மக்கள் வயல்வெளி வேலைக்கு செல்வார்கள் என்றால் அவ்வாறு யாருமில்லை. நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியை கைது செய்த பின்பு எத்தனை மணிக்கு காவல்நிலையம் வந்தோம் என்றால் காலை சுமார் 10.00 மணியளவில் வந்தோம். சம்பவ இடத்திலிருந்து காவல்நிலையம் வர பொதுவாக அரைமணி நேரத்தில்

செல்லலாம். எதிரியுடன் வருவதால் ஒரு மணி நேரம் ஆகிவிட்டது. காலை 7.15 மணியளவில் பொருளை கைப்பற்றியதால், காலை 8.30 மணியளவில் வந்திருக்கலாம் என்றால் எதிரிக்கு உணவு வழங்குதல், இயற்கை உபாயம் ஆகிய காரணங்களால் நேரமாகிவிட்டது. அதை பொது நாட்குறிப்பில் பதிவு செய்துள்ளோம். அதை நீதிமன்றத்தில் தேவைப்பட்டால் தாக்கல் செய்வோம். கைப்பற்றப்பட்ட பொருள் கஞ்சாவை தடவியியல் துறைக்கு அனுப்பவில்லை. அவ்வாறு செல்வி நகர் பேருந்து நிறுத்தம் இல்லை என்றாலும் சரியல்ல. சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றாலும், சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் எந்த தகவலும் வரவில்லை என்றாலும், அதன் அடிப்படையில் நான் ரோந்து பணிக்கு செல்லவில்லை என்றாலும், சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் எதிரியிடமிருந்து எந்த பொருளும் கைப்பற்றப்படவீல்லை என்றாலும், மேல் அதிகாரியின் உத்தரவின் பேரில் எதிரி மீது தவறான வழக்கு பதிவு செய்து, இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றாலும், எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமுமில்லை என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Typewritten to my dictation in open
court read over to the witness in Tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.

sd/- S.Sahaana
Judicial Magistrate No.II,
**Chengalpattu**